1975 நவம்பர் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கு ஈடாக சம்பளம் அளிக்க பணமில்லை. அரசாங்கம்தான் தரவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்து தக்க முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்தக் கல்லூரியிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு முறையான சம்பளம் கொடுக்கப்படவில்லை, குறைவான சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. அது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கவனிக்கப்பட வேண்டும்.

Government Arts College for Women, Kumbakonam

* 75. *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that a sum of Rs. 1 lakh was donated to the Government a few years back by the Rotary Club of Kumbakonam for the construction of an Auditorium at the Government Arts College for Women, Kumbakonam;

(*b*) if so, whether the work relating to construction has been taken up; and

(*c*) if not, the reason for the delay?

கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் அரங்கம் (Auditorium) ஒன்று கட்டுவதற்காக, கும்பகோணம் ரோட்டரி கிளப் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு லட்சம் ரூபாயை அரசுக்கு நன்கொடையாக வழங்கியது உண்மையா ?

(இ) ஆமெனில், கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : எத்தனை ஆண்டுகளாக இந்தப் பணம் கொடுக்கப் பட்டு ஆடிட்டோரியம் கட்டப்படாமல் இருக்கிறது, அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆடிட்டோரியம் கட்ட ரோட்டரி கிளப்பினரால் 1972-ம் ஆண்டு ஒரு லட்ச ரூபாய் நன்கொடையாக அந்தக் கல்லூரி முதல்வரிடம் கொடுக்கப்பட்டது. அந்த ஆடிட்டோரியம் கட்ட 3,40,000 ரூபாய் ஆகும் என்று கணக்கிடப்பட்டது. மேடைப்பகுதி மட்டும் கட்ட ஒரு லட்ச ரூபாய் செலவாகும் என்று கருதப்பட்டது. 1973-74-ல் அந்தப் பணி பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள், சென்டேஜ் சார்ஜ் 14.5 சதவிதம் ஆகும் என்று சொல்லி 1,45,000 ரூபாய் வேண்டுமென்று கேட்டார்கள். ரோட்டரி கிளப்பினர் ஒரு லட்சம் தான் தந்திருக்கிறார்கள். பிறகு பொதுப்பணித் துறையினரே, அந்தக் கல்லூரி முதல்வரிடமிருந்து கணக்கு முழுவதையும் தங்களிடத்தில் ஒப்படைத் தால், சென்டேஜ் சார்ஜ் வசூலிக்காமல் விடலாம் என்று சொன்னார்கள். அதன் பின் அந்தக் கணக்கு பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, இப்போது அந்தக் கட்டட வேலை துவங்கிவிட்டது. அது இந்த ஆண்டுக்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்தப் பணம் ஆடிட்டோரியம் கட்டுவதற்காக 1969-லே கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்போது ஒரு லட்ச ரூபாய் போது மானது என்று கருதப்பட்டது.

ஆனால் இப்போது அதற்கு 2, 3 லட்ச ரூபாய் ஆகும் என்று கருதப்படு கிறது. இன்னும் போகப் போக அதிகமாகலாம். ஆகையால் இந்த ஆண்டுக் குள்ளாகவாவது கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1972-லேதான் ரோட்டரி கிளப் அரசினர் மகளிர் கல்லூரி முதல்வரிடம் வழங்கியது. அந்த ஆடிட்டோ ரியம் கட்ட ஆகும் செலவு 3,40,000 ரூபாய். மேடைப் பகுதிக்கு மட்டும் 1 லட்ச ரூபாய் ஆகும், மற்ற பகுதிக்கு மேற்கொண்டு நிதி ஒதுக்கீடு செய்து கட்டிக்கொள்ளலாம் என்று கருதப்பட்டது. ரோட்டரி கிளப்பினர் ஒரு லட்ச ரூபாய் தருவதால், அவர்கள் சின்னம் பொறிக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் பெயரை அந்த ஆடிட்டோரியத்திற்கு வைக்க வேண்டுமென்றும்

@ 31-10-1975 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப் பட்டது.

1975 நவம்பர் 6]

கோரிக்கை விடுத்தார்கள். அந்த இரண்டு கோரிக்கைகளையும் அரசு ஏற்று, அதற்கு அனுமதி அளித்து, இப்போது ரோட்டரி கிளப் ஆடிட்டோரியம் என்ற பெயரிலேயே கட்டப்பட்டு வருகிறது.

Running of Nursing Homes by Professor of Medical College.

@ * 63 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that complaints have been received during 1975, that the Professor of Psychiatry, Tirunelveli Medical College, now on leave, is running two Nursing Homes at Thanjavur, contrary to the service rules;

(b) if so, whether the matter has been investigated; and

(c) the action taken thereon?

மருத்துவக் கல்லூரி பேராசிரியர் தனி மருத்துவ இல்லங்களை நடத்துதல்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பணியாற்றிவருபவரும், தற்போது விடுப்பில் உள்ளவருமான உள நோயியல் பேராசிரியர் பணிமுறை விதிகளுக்கு முரணாக, தஞ்சாவூரில் இரண்டு தனி மருத்துவ இல்லங்களை நடத்தி வருகிறார் என்று 1975-ஆம் ஆண்டில் புகார்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், இதுபற்றிப் புலனாய்வு செய்யப்பட்டுள்ளதா ?

(உ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் இத்தகைய பதவி எதுவும் இல்லை.

(இ) & (உ) : இவ்வினா எழவில்லை. கேட்கப்பட்ட கேள்வி திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியைப் பற்றியது. ஆனால் கோவை மருத்துவக் கல்லூரியிலே அத்தகைய பதவி உள்ளது. அதுபற்றி துணைக் கேள்வி கேட்பார்களானால், பதில் கூற முடியும்.

திரு. கே. எஸ். கணபதி : உளநோயியல் பேராசிரியராக இருந்தவர் தஞ்சையிலிருந்து கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அவர் தொடர்ந்து தஞ்சையிலே இரண்டு நர்சிங் ஹோம் நடத்தி வருகிறார். மேலும் அவர் இரண்டு ஆண்டுகளாக எக்ஸ்டிரார்டினரி லீவ் எடுத்துக்கொண்டு அதை நடத்தி

@ 31—10—1975 ஆம் நாள் வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்